| Page No.1 | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| நாள் | 08.01.2025 |
| MCOP | 33/2019 |
| எ.ம.சா.1 | தெய்வநாயகி |

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 08-ம் நாள் தெய்வநாயகி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தெய்வநாயகி | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

**முதல் விசாரணை –**

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

நான் தற்போது கோபி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைத்த அழைப்பாணையின்பேரில் வட்டார போக்குவரத்து அலுவலர் சாட்சியமளிக்க அனுமதி வழங்கி, கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி அனுமதிக்கடிதம் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அழைப்பாணையில் TN 63 V 3242 என்ற வாகனத்திற்கான அனுமதி சீட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் விபத்துக்குட்பட்ட பேருந்து ஈரோடு மாவட்டம் மற்றும் திருச்செங்கோடு வட்டத்திற்குள் இயக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின்படி, 06.03.2012 முதல் 05.03.2017 வரை அனுமதி நடைமுறையில் இருந்தது. மேற்படி பேருந்து 20.09.2016ஆம் தேதியில் கரூர் மாவட்டம், வேலாயுதபாளையம் காவல்நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது. மேற்படி அனுமதிக்கப்பட்ட

வழித்தடத்தை தவிர, மற்ற இடத்தில் பேருந்தை இயக்கினால் அது அனுமதி சீட்டின் நிபந்தனைகளுக்கு எதிரானதாகும்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. மேற்படி பேருந்தில் திருச்செங்கோடு வட்டம் மற்றும் ஈரோடு மாவட்டத்திற்குள் பயணிகளை ஏற்றிச் செல்லத்தான் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பயணிகள் இல்லாமல் பேருந்தை வேறு பகுதிகளில் இயக்குவதற்கு அனுமதி வேண்டுமா என்றால் முன் அனுமதி வேண்டும். மேற்படி முன் அனுமதி வேண்டும் என்பதற்கான விதி உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி விதிமுறைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லுகிறபடி, மேற்படி விதிமுறைகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பயணிகள் இல்லாமல் வேறு பணிகளுக்காக பேருந்து மற்ற இடங்களில் செல்ல முன் அனுமதியோ, அனுமதிச்சீட்டோ தேவையில்லை என்றால் சரியல்ல. மேற்படி விதிமுறைகள் இல்லாமல் காப்பீட்டு நிறுவனத்திற்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.